அவர்களுக்கு அறிவுறுத்தல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இனி எதிர் காலத்தில் இது மேலும் செம்மைப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

*9336—திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே இந்தக் கோரிக்கையினை ஏற்பதற்கு வாய்ப்பில்லை.

9–15 மணி

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுப்பது போல, ஆசிரியர்களுக்கும் கிடைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு ஊழியர்களைப்போல அத்தனை நாட்களிலும், வேலைசெய்வதற்கு ஆசிரியர்கள் முன்வந்தால், அதேமுறை அவர்களுக்கும் கையாளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்குதல்.

*9656 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ரேசன் கார்டுகள் விநியோகம்.

* 8615 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதிதாக ரேசன் கார்டுகள் விநியோகம் செய்யக் கூடாதென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது உண்மைதானா ?

(ஆ) அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; புது குடும்ப அட்டைகளை வழங்கலாம் என தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புது குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்றால், இடைக் காலங்களிலே எத்தனை மாதங்களாக இந்தக் குடும்ப அட்டைகள் கொடுக்கக்கூடாது என்று ஏதாவது ஆணை பிறப்பிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் புதிதாக வழங்க வேண்டாமென்று எப்போதும் ஆணை பிறப்பிக்கப்படவில்லை. 16–3–1990-ஆம் நாளன்று புதிய குடும்ப அட்டைகள் உரிய சோதனைக்குப் பின்னால் வழங்க வேண்டுமென்று அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதிலே, இதுவரையிலே 1–1–1990 முதல் ஜூலை மாதம் இறுதி வரையிலே வரப்பெற்ற மனுக்கள் 51,171 ஆகும். இவை பரிசீலிக்கப்பட்டு, 27,905 புதிய அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஜூலை மாதம் மட்டும், 9,672 குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப்பட்டிருக்கின்றன